★ ரூபா விலை 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 4 ரபி. ஆகி 2 இதழ் 339

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17—1—83

விசேட மலிவு விற்பனே!

அகலம் குறைக்கப்பட்ட [மஸ்கனேற்] அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள்

அளவுகள்:

12 அடி X 3 அடி
10 அடி X 3 அடி
8 அடி X 3 அடி
6 அடி X 3 அடி

தொடர்புகள்:

ஆனந்தி அன் கோ

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.
(5603)

## கடும் குளிர்: 412 பேர் பலி!

(புதுடில்லி)

இந்தியாவின் வடபகுதியில் குளிரினுல் இதுவரை 412 பேர் பலியானுர்கள் என்று நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் கடும் குளிர் உடனடியாகக் குறையும் சாத்தியம் இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று உத்தரப் பிரதேசம் பஞ்சாப்மாநிலங்களில் கடும் குளிர் வீசியது.

★ 'சமூக விரோதிகளை ஒழிப்போம்' எதிரொலி?

# புதிய கொலை பின்னணியில் 'புலிப்படை'?

## இரகசிய பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

''சமூக விரோதிகளை ஒழிக்கும்'' துண்டுப்பிரசுரங்கள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக விநியோகிக்கப்படுவது குறித்து, இரகசியப் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்று ''ஈழநாடு''விடம் தெரிவிக்கையில், சமூக விரோதிகளை ஒழிக்கும்' துண்டுப்பிரசுரங்கள் அண்மையில் விநியோகிக்கப்பட்டதற்கும் நாயன்மார்கட்டு கொலைச்சம்பவத்துக்கும் இடையே தொடர்பு இருக்கலாம் என்றுகருத நியாயமான 'சாட்சி'யங்கள் உண்டு என்று கருத்து வெளியிட்டார்.

பல கொள்ளைச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவராகப் பொலிசாரினுல் தேடப்பட்ட 'பாபு' என்றழைக்கப்படும் மார்க்கண்டு பாபுகுமார் எனும் இளைஞர், தலையில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடந்த சனிக்கிழமை நண்பகல் நாயன்மார்கட்டு செம்மணி வீதியில் இறந்து கிடக்கக் காணப்பட்டதைத்

[8-ம் பக்கம் பார்க்க]

## சுதந்திரதினத்தில் துக்கம் அனுஷ்டிக்குமாறு காங்கிரஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'தமிழ் பேசும் மக்களின் ஆதிபத்திய எல்லைகளின் மீது ஆட்சி செலுத்த உரிமையற்ற சிங்கள ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சுதந்திர தின வைபவங்களில் தமிழ் மக்கள் கலந்து கொள்ளாது. அத்தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்பதன்மூலம் மூலம் தமிழ் மக்கள் இன்னும் சுதந்திரம் பெறவில்லை என்பதை வெளி உலகுக்குஉணர்த்துதல் வேண்டும்'

அகில இலங்கை தமிழ்க்

(8ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டம் சம்பிரதாயமாக இயங்க ஆரம்பித்தது!

(மாவிட்டபுரம்)

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் இரண்டாவது பெரிய திட்டமாக விளங்கும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டஆலை நேற்று முன்தினம் காலை சம்பிரதாய முறைப்படி பரீட்சார்த்தமான முறையில் இயக்கப்பட்டது.

பலஆண்டுகாலமாக நடந்து வந்த 3-வது கட்டடவேலைகள் தீவிரமாக நடந்து இப்போது இயங்கும் நிலைக்கு பூர்த்தியடைந்துள்ளது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு அசோகாசோமரத்ன, ஆலைக்கான தீபை ஏற்றிவைத்தார்.

இதற்கு முன் சமய ஆராதனைகள் மாவை ஆதீனத்தை சேர்ந்த பிரம்மஸ்ரீ ஐ வைத்தியநாதக்குருக்கள் நடத்தி வைத்தார். கிறிஸ்தவ சமய கிரியைகளை யாழ்ப்பாணம் தேவாலயத்தை சேர்ந்த வண மைக்கேல் சுவாமியார் உறணி அந்தோனியார் தேவாலயத்தை சேர்ந்த வண தேவராஜ் அடிகளால் விசேட பூசை செய்து வைத்தார்கள்.

இவ்வைபவத்தில் சிமெந்து கூட்டுத்தாபன விநியோக அதிகாரி திரு அமரசிங்காவும்

[8-ம் பக்கம் பார்க்க]

## தென்னுபிரிக்க நகரில் தமிழ்மொழியை ஊக்குவிக்க பரவலான முயற்சிகள்!

### யாழ். வந்த டர்பன் பிரமுகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''தென்னுபிரிக்காவில் இந்தியர் பரவலாக வாழுகின்றனர். இந்தியரின் மொத்த ஜனத்தொகை 9 லட்சமாகும். இவர்களில் தென்னிந்தியர், குறிப்பாக தமிழர், மிகமிக குறைவான எண்ணிக்கை உடையவர்கள். செத்துக் கொண்டிருக்கும் தமிழ் மொழியைப் பாதுகாக்க பல்வேறு வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டர்பன் மேற்கு பல்கலைக் கழகமொன்றில் பதினெரு தமிழ் மாணவர்கள் இப்பொழுது பட்டப் பரீட்சை எழுதுவது, அங்கு வாழும் தமிழ் சமூகத்தினரின் முயற்சிக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்'

இவ்வாறு, தென்னுபிரிக்காவின் நகரமான டர்பனைச் சேர்ந்த வி. எம். ரெட்டி அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக விஜயம் செய்துள்ள திரு. வி. எம். ரெட்டி, டர்பன் நகரிலுள்ள ஸ்ரீ முத்துலிங்கநாத ஈஸ்வரர் ஆலயம் இந்து அறநிலையம், தென்னு

(8-ம் பக்கம் பார்க்க)

## காரில்சென்ற இளைஞர் பொலிஸ் விசாரணையில்

[யாழ்ப்பாணம்]

வாடகைக்கு அமர்த்தப்பட்ட தமது கார் கடத்தப்படுவதாக சந்தேகித்த கார்ச்சாரதி காரை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதுடன் வாடகைக்கு அமர்த்திய இளைஞரையும் பொலிஸில் ஒப்படைத்தார்.

இச்சம்பவம் குறித்து சுன்னுகம் பொலிஸ் நிலையத்தில் கார்ச் சாரதி ஈ. பொன்னுத்துரை செய்துள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''எனது கார் நேற்றுக்காலை

(8-ம் பக்கம் பார்க்க)

## விஞேதராசா

உன் தங்கை உதயா மூத்தண்ணு, மூத்தண்ணு என்று அழுதவண்ணம் இருக்கின்ருள். நீ அயோக்கியர் வசம் சிக்குண்டு எம்மை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளாய் — உடனே வீட்டிற்குவா — அப்பா தண்டிக்கமாட்டார். நீ வர யாரும் தடுத்தால் உடன் அறிவி.

உன் அன்பு,
அப்பாவும் அம்மாவும்.

5854

## தீவுப்பகுதி பஸ்கள் பண்ணைக்குமாற்றம்: ''யாழ். முதல்வருக்கு நான் கடிதம் அனுப்பவில்லை''

### காவலூர் எம். பி. மறுப்பு

(யாழ்ப்பாணம்)

''தீவுப்பகுதி பஸ்களை பண்ணை நிலையத்திற்கு மாற்றுவதென்ற முடிவு தொடர்பாக நான் யாழ். முதல்வருக்கு கடிதம் அனுப்பவில்லை. வடபகுதி போக்குவரத்துச்சபை தலைவருக்கு எழுதிய பிரதியை மட்டுமே யாழ். முதல்வருக்கு அனுப்பினேன் இந்த பிரதியில் நான் எவ்வித கண்டனமும் தெரிவிக்கவில்லை''

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

[7- ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு வீரபத்திர கோவிலிற்கு அண்மையில் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. C குலசேகரம், 'பத்மகிரி', தபாற் கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் 5861

இருபாலை, கோண்டாவில் றோட்டுக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணி. பனைகள் உட்பட விற்பனைக்கு உண்டு. விபரத்திற்கு: 'மகாவளவு', கோப்பாய் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 5852

கோண்டாவில் மேற்கு கலட்டிலேனில் 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிணற்றுப் பங்கும் உண்டு. தொடர்பு கொள்க: ஐ. தவராசசிங்கம், அருள் முருகன் ஜுவலரீஸ், 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5858

YANMAR – Dieselமீன்பிடி வள்ளத்தின் என்ஜின் (2 சிலிண்டர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். விவேகானந்தன், (றைவர் குட்டி) மருதடி, தெணியம்பை, வல்வெட்டித்துறை. 5859

HONDA EXPRESS மிக நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க V. K. தனநாயகம், 3-ம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர். 5830

நல்ல நிலையில் உள்ள போட்டுக்கள் விற்பனைக்கு உண்டு. வாக்கோர்ஸ் போட் சீஞோர் போட் நேரில் சென்று பார்வையிட விரும்புவோர் புளியந்துறை கடற்கரையிலும், வாங்க விரும்புவோர் வே. க. கணபதிப்பிள்ளை, சுளிபுரம் மேற்கு, சுளிபுரம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(5821)

யாழ். முனீஸ்வரன் வீதி, ஆனைக்கோட்டை, ஊரெழு ஆகிய இடங்களில் காணிகளும், ஸ்ரான்லி வீதியில் கடை வீடு வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பல்ரி சேவிசஸ், நடன்லப் ஸ்ரோரீஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(5836)

## வாடகைக்கு

பாடசாலை மாணவர்க்கு ஏற்ப அறை வாடகைக்குண்டு விபரங்கட்கு; விளம்பர இலக்கம்: 5853, C/o, ஈழநாடு, லிமிட்., யாழ்ப்பாணம்.
5853

யாழ்ப்பாணம், கொட்டடி, சிவன்பண்ணை வீதியில் 19-ம் இலக்க வீடு. இரு படுக்கை அறை, ஆபீஸ் அறை. கராஜ் மற்றும் பைப் வசதிகளுடன் வாடகைக்குண்டு. காலை 9-00 மாலை 7-00 வரை. திருமதி P. அட்சரமூர்த்தியுடன் தொடர்பு கொள்ளவும். 5864

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி – கொண்வென்ற் வீதி சந்தியில் சகல வசதிகளும் கொண்ட கடை ஒன்று வாடகைக்கு உண்டு. S. T. தில்லைநாதன் 428, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5832

## பயிற்சி

கொம்பியூட்டர் புரோகிருமிங், றேடியோ – டெலிவிஷன் எலக்றிக்கல் வயறிங், Hotel Management குறுகிய காலப் பயிற்சிகள், Spoken English ஒரு மாதத்தில் பேச, எழுத வாசிக்கப் பயிற்சிகள் அனைவரும் சேரலாம். ஆரம்பம்; 23-01-83 விபரம் நேரில். The School of Computer Studies, 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5856

## தேவை

இந்து வேளாளகுல 33 வயதுப் பல் வைத்தியர் பெண்ணுக்கு அதே குலத்தைச் சேர்ந்த டாக்டர், எஞ்சினியர், ஆசிரியர் மணமகன் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க: த இராமநாதபிள்ளை ஒய்வுபெற்ற அதிபர், தும்பளை பருத்தித்துறை. 5857

## தேவை

வேத்மன், ரிங்கர், வெல்டர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் அனுபவச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும் சு பாலேந்திரா, 586 கண்டி றோட், நெடுங்குளம் சந்தி, அரியாலை யாழ்ப்பாணம்.
5823

## சங்கானை ஐக்கிய நலன்புரிச்சங்கம்

### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

13-1-83ல் நடாத்திய சீட்டிழுப்பின் பரிசுக்குரிய இலக்கங்கள்

(1) 2978 (6) 1719
(2) 2622 (7) 0091
(3) 1525 (8) 3246
(4) 0978 (9) 2556
(5) 3519 (10) 4678

செயலாளர்,
(5851)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற புலோலி கிழக்கு வைரவியார் சிவப்பிரகாசத்தின் மரண சாதன விடயமாக

இறந்தவர் சபாபதிப்பிள்ளை தம்பிராசா, புலோலி கிழக்கு. மனுதாரர்

இல. 1160/T

எதிராக

1. தர்மராஜா தர்மகுலசிங்கம், புலோலி கிழக்கு. [பராயமற்றவர்]
2. சுப்பிரமணியம் பெண் பரமேஸ்வரி, புலோலி கிழக்கு. எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமுள்ள சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியபட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு தை மாதம் 27-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்கள் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
வி. செல்வராசா,
பதிவாளர்.

ச. இராமநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[5820]

## இடமாற்றம்

(சுழிபுரம்)

யாழ் மாவட்ட சுழிபுரம் உப அலுவலக ஆயுள்வேத வைத்தியசாலையின் புதிய வைத்திய அதிகாரியாக செல்வி தவமலர் சிவக்கொழுந்து இம்மாதம் முதல் கடமையேற்றுள்ளார் இவர் வவுனியா செட்டிகுளம் ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றி வந்தவராவர்.

## அராலி கொள்ளை சம்பவம்:

# சந்தேகநபர்கள் இருவர் அடையாளம் காட்டப்பட்டனர்!

(மாவிட்டபுரம்)

அராலி கிழக்கில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இருசந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட போது அடையாளம் காணப்பட்டனர்.

அராலிகிழக்கைச்சேர்ந்தவப் புக்குட்டி பாலசிங்கநாயகம் என்ற இளைப்பாறிய ஆசிரியர் வீட்டினுள் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளைக் கோஷ்டி தாலிக்கொடி, சங்கிலிகாப்பு, தோடு, 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட மற்றும் பொருட்களையும்

(5-ம் பக்கம் பார்க்க)

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
26% வீதம் தொடக்கம் 30% வீதம் வரை
வட்டி கொடுக்கப்படும். குறைந்த தொகை ரூபா 1000/-
விபரங்களுக்கு:
**யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.,**
3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். போன்: 23698

வடலியடைப்பு கலைவாணி விளையாட்டுக் கழகம்
14-01-83-ல் நடாத்தப்பட்ட

## அதிஷ்டலாபச் சீட்டின் முடிவுகள்

| | |
|---|---|
| 1-ம் பரிசு இலக்கம் | 5530 |
| 2-ம் பரிசு ,, | 691 |
| 3-ம் பரிசு ,, | 4907 |
| 4-ம் பரிசு ,, | 2110 |

20 ஆறுதல் பரிசில்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 564 | 4759 | 1034 | 4339 |
| 1266 | 1282 | 2198 | 47 |
| 983 | 2984 | 100 | 3008 |
| 4823 | 266 | 4885 | 1098 |
| 717 | 4915 | 4383 | 251 |

டிக்கட் இன்றி பரிசில்கள் வழங்கப்பட மாட்டாது.
பரிசில்களை 15-02-83க்கிடையில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகம்
5855

"கலைவாணி சனசமூக நிலையம்"
மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழை.
14-01-1983 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட

## சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு - 4668 2-ம் பரிசு - 1320
3-ம் பரிசு - 3226

ஆறுதல் பரிசுகள் (10)

| | |
|---|---|
| 1-ம் பரிசு—0103 | 2-ம் பரிசு—7044 |
| 3-ம் பரிசு—6768 | 4-ம் பரிசு—1656 |
| 5-ம் பரிசு—4473 | 6-ம் பரிசு—8710 |
| 7-ம் பரிசு—7552 | 8-ம் பரிசு—4884 |
| 9-ம் பரிசு—6068 | 10-ம் பரிசு—0725 |

குறிப்பு : (1) 14-02-1983 இற்குப் பின்னர் பரிசுப் பொருட்கள் வழங்கப்படமாட்டாது.
(2) ரிக்கட் இன்றி பரிசுப் பொருட்கள் வழங்கப்பட மாட்டாது.
5860

## திருமண அழைப்பு

மணமகன் : ஸ்ரீனிவாசன்
(பல்கலைக்கழகக் கல்லூரி, மட்டக்களப்பு)

மணமகள் : ஜெயலட்சுமி
(பொதுசன நூல்நிலையம், நிலாவெளி)

காலம் : 20-1-1983 வியாழக்கிழமை மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை

இடம் : கொக்குவில் மாத்தனை அருள்மிகு முருகன் ஆலயம்

இத் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

✶ வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்

| | |
|---|---|
| திருமதி | திருமதி |
| இ. சோமசுந்தரம் | இ. ஆசைப்பிள்ளை |
| டாக்டர் திரு.-திருமதி | மாத்தனை, |
| சி. எஸ். ராஜன் | சம்பியன் லேன், |
| இல. 2, செட்டித்தெரு, | கொக்குவில். |
| நல்லூர். | |

5825

சென்னை - ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டுகளிக்க
தொலைக்காட்சி ஏரியல் அமைப்பிற்கு

# வீனஸ், நியூவீனஸ்

ரி. வி., றேடியோ, மணிக்கூடுகளை உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி. வி., றேடியோ மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்,

விரும்பிய பாடல்களை பதிவுசெய்து கொள்ளவும்,

மற்றும் மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்,

மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன்
ரி. வி. ஏரியல் பொருத்திக்கொள்ள

**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி, (சாந்தி தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

**நியூவீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# "அணு ஆயுத அதிகரிப்பு உடனடியாக குறைக்கப்பட வேண்டும்!"

## உலகராஜதந்திரிகளிடம் பாப்பரசர் வேண்டுகோள்

வத்திக்கான், ஜன. 16

''அணு ஆயுதக்குறைப்பைத் தாமதமின்றி உலக வல்லரசுகள் மேற்கொள்ள வேண்டும்'' என்று பரிசுத்த பாப்பரசர் கேட்டுள்ளார்.

தமது தலைமையகமான வத்திக்கானில், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரைநிகழ்த்தும் போதே பாப்பரசர் மேற்கண்டவேண்டுகோளை விடுத்தார்.

வருடந்தோறும் பாப்பரசர் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் வத்திக்கானில் இருந்து உரையாற்றுவது வழக்கமாகும்.

பரிசுத்தபாப்பரசர் மேலும் தமது உரையில் கூறியதாவது: அமெரிக்காவும், சோவியத் யூனியனும் அணு ஆயுதப் பெருக்கத்தை நிறுத்தி தாமதமின்றி அவற்றைக்கட்டுப்படுத்தவேண்டும்.

இருதரப்பினரும் அணு ஆயுத. மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்த விடயத்தில் விட்டுக்கொடுத்துப் பேச்சுக்களை நடத்தவேண்டும்.

ஆயுதப்பரிகரணப் பேச்சு வார்த்தைகள் ஜெனீவாவில் நடக்கலாம் அல்லது உலகின் வேறு முக்கிய நகரங்களிலும் நடக்கலாம் ஆனல் அப்பேச்சுக்களின் வெற்றி தடையின்றி சுமுக இணக்கங்களுடன் முடிவடைவதிலேயே தங்கி உள்ளது.

அணு ஆயுதக்குறைப்பை மேற்கொள்ளச் செய்யும்வகையில் வல்லரசுகளைத்தூண்டச் செய்வதில் சகல ராஜதந்திரிகளும் முக்கியபங்கு வகிக்க வேண்டும்'' என்ருர். (கி)

# அணுசக்தி செய்மதி 'கொஸ்மஸ்' கட்டுப்பாடில்லாது புவியை நெருங்குகிறது!

## 2-ம் உலக யுத்த அணு குண்டைவிட ஐந்து மடங்கு கொடியதாம்!

லண்டன், ஜன. 16

சோவியத் அணுசக்தி செய்மதியான 'கொஸ்மஸ்-1402' கட்டுப்பாடற்ற நிலையில் பூமியைநோக்கி ஆடி அசைந்தவாறு நெருங்குகிறது!

சுமார் 110இறுத்தல் யுரேனியத்தை 'கொஸ்மஸ்-1402' கொண்டுள்ளது. இத்தொகை இரண்டாம் உலகயுத்தத்தில் ஜப்பானிய தீவுகளான 'ஹீரோஷிமா', 'நாகஸாகி' ஆகியனவற்றில் போடப்பட்ட அணு குண்டுகளில் இருந்ததைவிட ஐந்துமடங்குகள் அதிகமானவையாகும்.

இந்த அணுசக்தி செய்மதி புவியிலுள்ள தமது விண்வெளி நிலையத்தின் கட்டுப்பாட்டை இழந்ததை சோவியத் ஆராய்ச்சியாளர்கள் 10 நாட்களுக்கு முன்னரேதெரிவித்திருந்தனர்.

'கொஸ்மஸ்' செய்மதி புவி மண்டலப்பரப்பை ஊடறுத்தும் எரிந்து சாம்பராகிவிடக்கூடிய சாத்தியங்களே பெருமளவு காணப்படுகிறது. எனவே இதன் நிலை குறித்து கவலைகொள்ளத் தேவையில்லை என்று சோவியத்தின் ஆராய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனல் அமெரிக்க விண் ஆராய்ச்சியாளர்கள், இந்த செய்மதியினல் அபாயங்களே கூடுதலாக இருக்குமென்று தெரிவித்துள்ளதுடன், புவி மண்டலத்தில் இது எரிந்து சாம்பராகும் சாத்தியம் மிகக் குறைவானதே என்று அறிவித்துள்ளனர்.

இதேவேளை சகல உலக நாடுகளும் இந்த அணுசெய்மதி புவியில் விழும்பட்சத்தில் இதன் தாக்கத்தைக்குறைக்கும் விதத்தில் மக்களை எச்சரித்து வருகின்றன.

சிலநாடுகளில் கதிரியக்கத் தாக்கத்தால் இருந்து மக்களைக் காப்பாற்றக்கூடிய வகையில் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஜனவரி 23ந் திகதிக்கும் 26ந் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 'கொஸ்மஸ்-1402' புவியில்விழுந்துநொருங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது! (கி)

லெபனுனில்

# அமெரிக்கத் துருப்புகள் தொடர்ந்து இருக்கும்!

வாஷிங்டன், ஜன. 16

லெபனுனில், அமெரிக்கா தொடர்ந்து தனது துருப்புக்களை வைத்திருக்க முடிவுசெய்துள்ளது.


வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் பிரபல அமெரிக்கப் பத்திரிகையான 'வாஷிங்டன் போஸ்டுக்கு' வழங்கிய பேட்டியொன்றிலேயே இதனைத்தெரிவித்தார்.

இப்பேச்சாளர் மேலும் கூறியதாவது ''லெபனுனில் பதட்டநிலை தொடர்ந்தும் இருப்பது காரணமாகவே ஐ. நா. சமாதானப்படையில் உள்ள அமெரிக்கத்துருப்புக்களை லெபனுனில் வைத்திருக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

லெபனுன் - ஸ்ரேலுக்கிடையே ஆரம்பமாகியுள்ள பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வெற்றியடைய வேண்டுமென்றே அமெரிக்கா விரும்புகிறது என்ருர்.

தற்போது லெபனுனில் ஐ. நா. சமாதானப்படையில் சுமார் 1600 அமெரிக்க மாலுமித்துருப்புகள் இருக்கின்றன. (கி)

CENTRIC
சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ.5,250/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2
தொலைபேசி: 26558/9

வவனியா மாவட்ட

# ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்?

(வவனியா)

நிரந்தர நியமனம் அற்ற கடமையிலுள்ள ஆசிரியர்களுக்கு எதர்வருகின்ற மாதம் வழங்கப்படவிருக்கும் ஆசிரியர் நியமனத்தில் நிரந்தரநியமனம் கிடைக்கவுள்ளது.

வவனியா கல்விமாவட்டத்தில் சுமார் 60பேர் இந்தவகையில் நிரந்தரமாக்கப்படுவார்கள். இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமென்று கல்வி அமைச்சரை வவனியா எம். பி யும், ஐ. தே கட்சி அமைப்பாளரும் கோரியுள்ளனர்.

அதேவேளை வவனியா மாவட்ட அபிவிருத்திசபையில் ஏற்கனவே இதுதொடர்பான பிரேரணை ஒன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வஜனவாக்கெடுப்பு பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொள்ள வவனியா வந்த ஜனுதிபதியிடமும் மேற்படி ஆசிரியர் சங்கம் தமக்கு நிரந்தர நியமனம்கோரி மகஜர் ஒன்றை கையளித்தது.

வவனியா மாவட்டத்தில் சுமார் ஒருவருடத்துக்கு மேலாக கடமை புரியும் இந்த வகையிலான ஆசிரியர்கள் பெரும்பாலும் கிராமப்புற பாடசாலைகளிலேயே கடமை புரிகின்றனர்.

# மட்டுவில் கொலை: சந்தேகநபர் சரண்

(மட்டுவில்)

மட்டுவில் கொலை சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான செல்லப்பா சிவபாதம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் சரணடைந்தார்.

நீதிபதி அவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மேல் விசாரணையை இம்மாதம் 24ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி லிகிதரான தாமோதரம் பிள்ளை சந்திரசேகரம் மட்டுவில் மகா வித்தியாலய சந்தியில் வைத்து கிறீஸ் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் தேடப்பட்டு வந்தார்.

சந்தேகநபர் சட்டத்தரணி திரு. செல்லப்பா அம்பிகைபாலன் மூலம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

## உடுப்பிட்டி எம். பி. க்கு 'சிவா' பாராட்டு

(கரவெட்டி)

''உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கத்தின் மீது ஒரு சிலர் பழியைச் சுமத்திவருவதையிட்டு நான் வேதனைப்படுகின்றேன், அவர் மீது பழிகூறுபவர்கள் அவரில்பொருமை கொண்டவர்களும் மீண்டும் சாதிபேசி பதவிக்குவர எண்ணுபவர்களுமே''. என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் கரவெட்டி கிழக்கிற்கு ஒருலட்சத்து 70ஆயிரம் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ள மின்விநியோகத்திட்ட ஆரம்பவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஆ. கந்தப்பு தலைமையில் நடைபெற்ற இச்சிறப்பு விழாவில் திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: ' உடுப்பிட்டித்தொகுதியில் திரு. இராசலிங்கம் பாராளுமன்ற உறுப்பினரான பின்னர் பலவிதமான முன்னேற்ற அபிவிருத்திகளைச் செய்து இருக்கின்ருர்.

ஒரு சமூகத்திற்குத்தான் அவர் எல்லாம் செய்கிருர், என்ற பழிச்சொல்லுக்கு, இன்று திறந்து வைத்த மின்சார விநியோகத்திட்டம் நல்ல பதில் சொல்லும். இந்தத்திட்டம் இந்தக்கிராமத்தில் வாழும் மூன்று சமூகத்தவர்களுக்கு பயனளிக்கின்றது. இந்த மேடையில் சகல சமூகத்தவர்களும் சமூகம் கொடுத்து அவரை மனமாரப்பாராட்டியது அவருக்கு சிறந்த சான்ருகும்'' என்ருர்

உடுப்பிட்டி எம், பி திரு க. இராசலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு மின் ஒளியை ஏற்றி மின்விநியோகத்தைத் தொடக்கிவைத்தார்.

## தி. மு. க. உறுப்பினர் அ. தி. மு. க.வில் சேர்ந்தார்

சென்னை, ஜன. 15

பாண்டிச்சேரி சட்ட சபையின் தி. மு. க. தலைவர் திரு. எம். ஏ. சண்முகம் அ. தி.மு. க.வில் சேர்ந்துள்ளார். இதனுல் பாண்டிச்சேரி சட்ட சபையில் தி. மு. க.வின் உறுப்பினர் தொகை பதினென்காகக்குறைந்துள்ளது.

(வெ)

## இந்திய ராணுவ பலம்

புதுடில்லி, ஜன. 16

''போர்த்திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் இந்திய இராணுவம் தனது நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும்''

இவ்வாறு இந்திய இராணுவத்தின் பிரதம தளபதி பீல்ட் மார்ஷல் கே. வி. கிருஷ்ணராவ் கூறினுர். இந்திய இராணுவத்தின் ஆண்டுவிழா கொண்டாட்டம், நேற்று புதுடில்லியில் நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

தளபதி கிருஷ்ணராவ் மேலும் கூறியதாவது: ''இந்திய இராணுவம் அதன் ஆரம்ப காலத்திலிருந்து சீரான வளர்ச்சியையே பெற்றுவருகின்றது.

பல்வேறுபட்ட நடவடிக்கைகளிலும் எமது வீரர்கள் சிறப்புற்றிருக்கின்றனர். எதிர்காலத்தில் எமது இராணுவத்தின்போர்த்திறமைகளைமேலும் சீராக்கி விரிவுபடுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்ருர்.

ஆண்டுவிழா நிகழ்ச்சிகளின் சிறப்பு அம்சமாக இராணுவத்தின் பல்வேறு பிரிவினரின் அணிவகுப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்தஅணிவகுப்பை தளபதி கிருஷ்ணராவ் ஏற்றுக்கொண்டார்.

இந்தியா அண்மையில் வாங்கிய ரி-72 ரக நவீன ராட்சத டாங்கி வண்டிகளும் அணிவகுப்பில் சென்றமை குறிப்பிடத்தக்கது. (கி)

### மணிவாக்கு

முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங்களவு மிகுந்திடுங் காசினி
என்னருநந்தி எடுத்துரைத்தானே.

— திருமந்திரம்

## நமது நோக்கு

# நாகதாளி நாகரிகம்

ஒரு ஜன சமுதாயத்தின் நிலை உயர வேண்டுமானால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் கண் சோம்பலற்ற முயற்சியும், நல்ல அறிவும் இருக்கவேண்டும். இது தனி மக்களுக்கு இருந்தாலே சமுதாயம் உயரும்.

இது பொய்யா மொழி. இன்றைய நிலையிலும் பொய்யாதிருப்பது பெரு வியப்புக்குரியதல்லவா?

இன்றைய நிலையென்று பொதுவாகக் குறிப்பிட்ட நாம் இன்றைய தினத்தையும் கவனத்திற்கொண்டுள்ளோம்.

19-ம், 20-ம் நூற்றுண்டுக்கால யாழ்ப்பாண சைவ உலகின் வரலாற்றில் சோதியாய் விளங்கியவர் நாவலர் பெருமான். 'அவர்களுக்குப் பின் அருணசலந்தான்' என்ற மதிப்புரைக்கு உரித்தான அருணசல உபாத்தியாயர், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், இந்துபோர்ட் இராசரத்தினமாகிய மூவரும் சுடர்களெனலாம்.

இன்றைய தேதியில் சைவத்துக்கும் தமிழுக்கும் உழைத்த பெரியார் அருணசல உபாத்தியாயர் மறைந்து 63 ஆண்டுகள் முடிந்தன, சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் பிறந்த தினமும் இதுவே.

இவ்விரு பெரியோர்கள் ஒரே தேதியில் பிறந்தும் மறைந்து மிருப்பதால் இத்தினம் நினைவுக்கு இலகுவாகின்றது.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரத்தின் பன்முகப் பட்டபணி நான்கு வருடங்களுக்கு முன் அவர் பிறந்த நூற்றுண்டு விழாக்கொண்டாட்டத்தில் புத்துயிர் பெற்றதெனலாம். மேலும் தமிழிலும், ஆங்கிலத்திலும் அவர் எழுதிய அரிய நூல்கள் அவருடைய பணியை என்றும் நின்று நிலைக்க உதவும் பெருமையுடையன.

அவர்களுக்குப் பின் அருணசலந்தான்'' என்ற முக்கியத்துவம் வாய்ந்த வர்ணனை இன்று பலருக்கும் புரியாத பாஷை.

'அவர் யார்?' என்று கேட்டவர், இன்று எம்மதியுள் முனிவர்போல் வாழும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள்; அன்று நாவலர் வித்தியாசாலைக் காவிய பாடசாலையில் மாணவனுயிருந்தவர்.

'அவரா? அவரை இன்னும் அறியாயா? அவர்களுக்குப்பிறகு அருணசலம் தான் இந்த நாட்டில் ஒரு மனிதர்' என்று விடையளித்தவர் நாவலர் தமையனின் மகன் மனேஜர் ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்கள். 'அவர்கள்' என்று மனேஜர் சொல்வது நாவலர் அவர்களை.

இந்த அறிமுகத்தைத் தமிழுலகத்துக்கும், சைவ உலகத்துக்கும் வழங்கிய பெரியார் பண்டிதமணி என்றால், குறிப்பாகச் சைவ உலகம், அருணசல உபாத்தியாயரை இன்று மறந்த நிலையில் இருப்பதன் மர்மம் என்ன?

நெற்றியில் திருநீறு இட்டுச்செல்லும் மாணவர்கள் அதை அழித்துவிட்டே வகுப்புக்குச் செல்லும் நிர்ப்பந்தம் இன்று எங்கும் உண்டா?

சைவப்பிள்ளைகள் எல்லோரும் தாராளமாக 'தக்கோர்' புகழும் திருநீற்றை அணிந்து செல்லும் வாய்ப்பை ஏற்படுத்திய மகான் அருணசல உபாத்தியாயர் என்பதை சைவ உலகம் மீண்டும் நினைவிற் கொள்ளும் காலம் வருகிறது.

வரலாற்றுரீதியில் இது பண்டைக்காலம்போல் தோற்றுகின்றது; தமிழர்களுக்குரிய இயல்பான திறமைகள் பல உண்டாயினும், வரலாற்று உணர்வு அவற்றுள் ஒன்று என்பது நிச்சயம்!

இன்று அருணசல உபாத்தியாயர் மறைந்து அறுபத்து மூன்றுகள் கழிந்துவிட்டன. அப்பெரியாரின் பிறப்பிடமாகிய காரைநகரின் சைவமகாசபை பத்துவருடங்களுக்கு முன் அவருடைய வரலாற்றை ஒருசிறு நூலாக வெளியிட்டிருக்கிறது. இவ்வளவுதான்? போதுமா?

இன்னொருவிதத்தில் இந்த ஆண்டு சைவ உலகத்தை வெட்கவைக்கும் ஆண்டாய் அமைகிறது.

1916-ஆம் ஆண்டுதொடக்கம் அருணசல உபாத்தியாயரின் தவம்பயன் செய்யத்தொடங்கியது. சைவ உபாத்தியாயர்கள் உதயமானுர்கள்; ஆனுல் அவர் மறைந்த கணத்திலே சைவ வித்தியாவிருத்திச் சங்கம் உதயமாகவேண்டுமென்று நினைத்தவர் அவருடைவாரிசான இந்துபோட் இராசரத்தினம் அவர்கள்.

நாட்டில் உருவான ஆயிரமாயிரமான சைவ ஆசிரியர்கள், அவர்களின்பிள்ளைகள். பேரப்பிள்ளைகள் இன்றைய சமுதாயத்தின் பெரும்புள்ளிகள்! இலங்கையில் மட்டுமல்ல. பரந்துபட்ட (சுருங்கிவரும்) உலகின் பல பாகங்களிலும அரியபெரிய செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்துபோட் நூற்றுண்டு எவ்வாறு கொண்டாடப்படுகின்றது? இருந்துபார்ப்போம். ஆபத்தானகாலத்தில் அதற்குரிய தலைநாயகர்கள் தோன்றுகின்றனர். அவர்கள் மறைய உலகமும் அவர்களை மறக்கின்றதா?

புரட்சிக்காலத்தில் உருவாகும் தீவிர உணர்வு என்றும் நிலைத்திருப்பதில்லை. காலகதியில் நாடுகாடாகிறது. இந்த மண்ணில்இவ்விதபெரியார்கள் உலாவினுர்களாவென்று இனிவரும் சந்ததியினர் சந்தேகப்படுவார்கள்; அவ்வளவுதூரம் அவ்விதவேகத்துடன் நாட்டைக் காடுமறைத்துவிடும்.

பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏற நாகதாளி நாகரிகம் தலைவிரித்தாடும். அருணசலத்தையும் இந்துபோட் இராசரத்தினத்தையும் மறந்துவிட எவ்வித தவமும் செய்ய வேண்டியதில்லை.

அவர்களை உயிர்ப்பிக்க தவம் அத்தியாவசியம்.

# வீடியோ கஸெட்மூலம் தமிழ்ப் போதனை!

## தஞ்சாவூர் பல்கலைக்கழகம் ஏற்பாடு!

(சென்னை)

தமிழ்ப் பாடங்களைப் போதிக்கும் 'வீடியோ' தொலைக்காட்சி கஸெட்டுக்களை தஞ்சாவூர் பல்கலைக் கழகம் வெளியிடவுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள தமிழ்ப்பேசத்தெரியாத தமிழர்களின் நலனைமுன்னிட்டே இந்த 'வீடியோ' கஸெட்டுக்கள் வெளிவரவுள்ளன.

தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தில் கடந்த வாரம் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இவ்வகுப்புகளில் தமிழகம் உட்பட வெளிநாட்டு தமிழறிஞர்களும் பங்குபற்றினர்.

இந்த வகுப்புகளின் போதே 'வீடியோ' கஸெட்டுக்கள் வெளிவரவிருப்பது குறித்தும் அறிவிக்கப்பட்டது.

தமிழக அமைச்சரவை சபாநாயகர் திரு. ராஜாராம் இந்த வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து தலைமையுரை நிகழ்த்தினுர். அவர் தமது உரையில், ''தமிழர்கள் தமது தாய் மொழியை அழியவிடாது வளர்த்துக்கொள்வதில் அதிக

(8-ம் பக்கம் பார்க்க)

### மாணவி கமலம் கொலை வழக்கு:

# சட்ட மாஅதிபரின் பணிப்பில் இரண்டாம் எதிரி விடுதலை!

## யாழ். மேல் நீதிமன்றத்தில் 1-ம் எதிரி மீது வழக்கு

(தமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் கொலைவழக்கு 2ம் எதிரி பொன்சியஸ் பெர்ணண்டோவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்குச் சாட்சியமில்லாததனுல் சட்ட மாஅதிபரின் பணிப்பின் பேரில் 2ம் எதிரி பருத்தித்துறை நீதிவானுல் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

1ம் எதிரி ராஜ்குமாருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம்திகதி இரவு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரனை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் வைத்துக் கொலைசெய்ததாகவும், கொலையுண்ட கமலம் அணிந்திருந்த 3600ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்ததாகவும் குற்றஞ்சாட்டி பருத்தித்துறைப் பொலிசார் பருத்தித்துறை பிச்ரேட்டைச் சேர்ந்த கொலையுண்ட கமலத்தின் ஒன்றுவிட்ட சகோதரரான கந்தசாமி இராஜ்குமார் (ராஜன்) அல்லது வீரப்பன் என்பவருக்கும், பொன்சியஸ் பெர்ணண்டோ என்பவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இக்கொலை வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுவந்தது. 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், 2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயாவும், நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவனருள் சுந்தரம், செல்விகளான சந்திரா சச்சிதானந்தம், உமா துரைசிங்கம், எல். சி. பிலிப் ஆகியோரும் ஆஜராகி வழக்கை நடத்திவந்தனர்.

யாழ். மேல் நீதிமன்றம் 2ம் எதிரி பொன்சியஸ் பெர்ணண்டோவை பிணையில் செல்ல அனுமதிவழங்கி, 1ம் எதிரி ராஜ்குமாரை (ராஜன்)த் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்க உத்தரவிட்டிருந்தது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற இக்கொலை வழக்கு விசாரணைகள் பூர்த்தியடைந்ததும் நீதவான் இக்கொலை வழக்கை மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியிருந்தார் 1ம் எதிரி தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

சட்ட மாஅதிபர் இக்கொலை வழக்கில் 2ம் எதிரி பொன்சியஸ் பெர்ணண்டோவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு சாட்சியங்கள் இல்லாதபடியினுல் 2ம் எதிரியை விடுதலை செய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு உத்தரவு வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் 2ம் எதிரி பொன்சியஸ் பெர்ணண்டோ

(8ம் பக்கம் பாக்க)

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிந்தனைகளுக்கும், இந்த நூற்றுண்டின் சைவ எழுச்சிக்கும் இடையிலமைந்ததொரு சேதுபந்தனம் காரைநகர் அருணசல உபாத்தியாயர் அவர்கள்'' என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்கள். இப்பெரியார் மறைந்து இன்று 63 வருடங்கள் முடிவடைகின்றன. அன்னரை நினைவு கூரும் வகையில் இப்பாக்கள் இங்கு இடம் பெறுகின்றன.

63வது ஆண்டு நினைவஞ்சலி

## சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த ச. அருணசலம் உபாத்தியாயர்

சீரொடு திருவும் சிவநெறி வழக்கும்
சிறந்திடு சால்புளோர் வாழும்
காரைமா நகரிற் பழம்பெருங் குடியிற்
கவினுறு சங்கரப் பிள்ளை
ஏருறு மெழிற் றுவசனீன் றெடுத்த
இணையறு குரிசில் தன்னுடலை
பாரினிற் சேவை புரிவதற் காக்கும்
பயன்பெறு பாக்கியம் படைத்தோன்.

சைவமுந் தமிழுந் தழைத்திடல் வேண்டும்
தவநெறி பெருகிடல் வேண்டும்
செய்வினை யெல்லாஞ் சிவனடித் தொண்டாய்த்
திகழ்ந்திட வேண்டுநல் லறங்கள்
வையகத் தெங்கும் வளர்ந்திடல் வேண்டும்
மற்றிவை நனவினிற் கனவில்
எய்திட வாழ்ந்தோன் இங்கிதம் பொறுமை
எளிமையா மணிகல முள்ளோன்,

பொதுநலத் தொண்டு நாவலர்ப் பின்னர்ப்
புரிபவ ரூரெனிற் காரைப்
பதியினன் அருண சலமலா திலையெனப்
பலமுற நலைமா நகரின்
அதிபன்கை லாய பிள்ளையாய்ந் துணர்ந்தே
யறைந்தவை கேட்டன மிதன்மேற்
துதிபெறு மவன்சீர் சொல்லிட வொன்றும்
தோன்றிட வில்லையெம் மகத்தே.

—புங்குடுதீவு பேராசிரியர் இ. சி. சதாசிவம்பிள்ளை

## ஈழத்துச் சிதம்பரபுராணத்தில்...

அன்னவரின் நெறிப்பற்றை யெழுச்சிகளை
முன்னுணர்வை யயரா வூக்கை
உன்னித்தன் வயமிழந்து திருவருளின்
குறிப்பென்றே யுள்ளங் கொண்டு
பொன்னனைய பெருந்தொண்டிற் புகுந்துழைத்தான்
சைவர்புரி புண்ணி யத்தின்
மன்னுபய னுய்வந்தா னரசமணிப்
பெயரானன் மதியின் மிக்கான்.

சைவரிகளி ருதரவும் பெருநிதியு
மரசினர்தஞ் சார்புங் கொண்டு
மைவளருங் கண்டத்தான் சமயநெறி
வளர்ந்தோங்க மாசில் பள்ளி
மெய்வகையிற் பன்னூறு நிறுவினனுல்
நாடெங்கு மெய்மை யுள்ளச்
சைவனரு ணசலற்குச் சிலையாகித்
தமிழ்போலத் தழைத்து வாழி

— இளமுருகனர்.

## மல்லாகம் கொலை வழக்கு

# "கத்தியுடன் வந்த 1-ம் எதிரி 'செத்தலை' கழுத்தில் வெட்டினர்"

### கார் சாரதி கதிர்காமத்தம்பி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"காருக்குள் வைத்து 'செத்தலை' 1-ம் எதிரி கத்தியால் வெட்டினர். வெட்டுப்படவில்லை. மீண்டும் வெட்டினர். கதவில் வெட்டுப்பட்டது. நான் கதவைத் திறந்து ஓடும்படி கூறினேன். செத்தல் இறங்கிப்பார்த்தபோது 1-ம் எதிரி கழுத்தில் கத்தியால் வெட்டினர்"

மல்லாகம் கொலைவழக்கில் சாட்சியமளித்த வி. கதிர்காமத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது

இவ்வழக்கில் 1976 ஜனவரி 6-ம் திகதி மல்லாகத்தில் அழகன் நாகனை வெட்டியதாக செல்வராசா, கந்தசாமி ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். பாலாதம்பு, சட்டத்தரணிஆர்.ஜே.செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி என். நவரத்தினம் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

அரசதரப்பில் அரசசட்டத்தரணி ஐ ஞானதாசன் ஆஜரானர்.

வி.க. கதிர்காமத்தம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

1976-ல் நான் கூவிலில்வசித்தேன். அப்போது வாடகைக்குக் கார் ஓடினேன். தோட்டமும் செய்தேன். இறந்தவரான அழகன் நாகன் அல்லது 'செத்தலைத்' தெரியும். இறந்தவர் என் உறவினர். அவர் என் தாயாரின் சகோதரியை மணந்தார். அவர் இறந்த தினம் ஞாபகமிருக்கிறது.

சம்பவம் நடந்ததினம் காலை நான் அண்ணமார் கோவிலில் நின்றேன். அன்று கார் ஓடினேன். வாடகைக்கு விடக் கார் வைத்திருந்தேன். அது ஒரு ஏ 40 கார். இறந்தவர் தான் அன்று வாடகைக்குப் பிடித்தார். நான் இறந்தவரை மல்லாகம் நீதிமன்றம் கொண்டுசெல்றேன். நானும் இறந்தவரும் நாகமுத்துவும் காரில் சென்ருேம். முன்னுக்கு நாகமுத்து இருந்தார். பின்னுக்கு செத்தல் இருந்தார். நான் கோவிலடியில் நின்றபோது நீதிமன்றம் போகவேண்டுமென்றதால் போனேன்.

என் வீட்டிலிருந்து மல்லாகம் நீதிமன்றம் 3 மைல் தூரம் காலை 8 மணிக்குப் புறப்பட்டோம், மல்லாகம் சந்திக்குப் போகிற வீதியால் சென்ருேம்.

பின்னும் கார் ஒன்று வந்தது. விலத்திச்செல்லப் பாதை கேட்டார்கள். வளைவு இருந்ததால் 'சைட்' கொடுக்கவில்லை. 'கோண்' அடித்தார்கள். மல்லாகம் சந்திக்கருகில்தான் பின்னல் வந்த கார் 'சைட்' கேட்டார்கள். கார் விலத்தி வந்து நின்றதும், கதவைத் திறந்து 1-ம் எதிரி கத்தியுடன் வந்தார். அது ஒரு ஏ 40 கார். 1-ம் எதிரியை அநேக காலமாகக் தெரியும். காரில் 'வீமன்' என்று அழைக்கப்படும் நபரும் இருந்தார். அவரின் பெயர் தெரியாது. வீமன் 2-ம் எதிரி. அவரை 1976-ம் ஆண்டுக்கு முன் 5 வருடகாலமாகத் தெரியும். 2-ம் எதிரியின் பெயர் கந்தசாமி என்று இப்ப தெரியும். 2-ம் எதிரி காருக்குள் இருந்து இறங்கி நின்ருர்.

காருக்குள் வைத்து 1-ம் எதிரி கத்தியால் செத்தலை வெட்டினர். வெட்டுப்பிடிக்கவில்லை. அடுத்த வெட்டு வெட்டினர். அது கதவில் பட்டது. நான் கதவைத் திறந்து 'ஓடும்படி' கூறினேன். நான் இடப்பக்கக் கதவைத் திறந்துவிட்டேன். பின்னல் பார்த்துப் பார்த்துப் போக 1-ம் எதிரி கழுத்தில் வெட்டினர். 1-ம் எதிரி இரண்டு வெட்டு வெட்டியதைக் கண்டேன்.

### எனக்கும் வெட்டினர்

காப்பாற்றலாம் என்று கிட்டப்போனேன் எனக்கும் வெட்டினர். எனக்குத் தோள் மூட்டில் வெட்டுப்பட்டது. பெரிய கொடுவாள் கத்தியை 1-ம் எதிரி வைத்திருந்தார் நான் ஓடிப்போய் திரும்பிப் பார்த்தபோதுதான் அடுத்த வெட்டு வெட்டினர். நாகமுத்து எனது காரின் பின்னல் நின்ருர். அவர் 'வெட்ட வேண்டாம்' என்று சத்தம் போட்டார்.

2-ம் எதிரி காருக்குள் இருந்ததைக் கண்டேன். அதன் பின் அவரைக் கவனிக்கவில்லை.

### இறந்துவிட்டார்

நான் போன காரின் பின் கதவு திறந்திருந்தது. இச்சம்பவம் 10 நிமிடத்திற்குள் நடந்தது. நான் திரும்பிவந்து பார்த்தபோது செத்தல் இறந்துவிட்டார்.

அப்போது ஒருவர் காரில் வந்து நிற்பாட்டிவிட்டு அந்த இடத்தில் நின்ருர். என்னை ஆஸ்பத்திரிக்கு வரும்படி கூறினர். நான் மறுத்துவிட்டேன். 'தான் ஒரு அதிகாரி பயப்படாமல் ஏறு' என்ருர். அவர் என்ன அதிகாரி என்று எனக்குத் தெரியாது. அதிகாரி சுன்னகம் பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் சென்ருர். அந்த அதிகாரியை அன்று தான் முதன்முதல் கண்டேன். காரில் செல்லும்போது இரத்தம் போய்க்கொண்டிருந்தது.

அதிகாரி 'யார் செய்தது?' என்று கேட்டார். செல்வராசா காரில் வந்து வெட்டினர்என்று சொன்னேன்.

எனக்கும் 1ம் எதிரிக்குமிடையில் 76ம் ஆண்டு மனஸ்தாபம் எதுவும் இல்லை. 2ம் எதிரிக்கும் எனக்குமிடையில் மனஸ்தாபம் இல்லை.

இறந்தவருக்கும் எதிரிகளுக்குமிடையில் மனஸ்தாபம் இருந்ததா? என்பதுபற்றி எனக்கு தெரியாது,

அன்று 'செத்தல்' வழக்கு ஒன்று இருப்பதாக கூறி மல்லாகம் நீதிமன்றம் சென்ருர்.

1ம் எதிரி வெட்டியபோது காரின் முன்கதவில் அந்த வெட்டு பிடித்தது.

பொலிஸ் நிலையத்திற்கு காலை 9-30மணியளவில் அதிகாரியுடன் சென்றேன். பின் நான் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு சென்றேன். அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.

சம்பவம்நடந்ததினம் இரவு ஆஸ்பத்திரிக்கு பொலிசார் வந்தனர். பொறுப்பதிகாரி ஒருவர் வந்தார். பெயர் தெரியாது."

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது. (க)

## இடிந்து விழும்நிலையில் சந்தைக்கட்டிடம்

(கரவெட்டி)

மாலைவேளையில் மாத்திரம் கூடும் துன்னலை–கட்டைவேலி கோவிற்சந்தையிலுள்ள மரக்கறிச்சந்தைக்கட்டிடம்இடிந்து விழும் அபாயநிலையிலுள்ளதால் இச்சந்தைவியாபாரிகளும் பாவனையாளர்களும் அச்சமடைந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து பிரஸ்தாப சந்தைக்கட்டிடத்தில் வியாபாரம் நடைபெருது சந்தைக்கட்டிடத்திற்கு வெளியிலேயே கடந்த பலவருடங்களாகவியாபாரம் நடைபெற்று வருகின்றது.

நெல்லியடி, கரவெட்டி, துன்னலை, கட்டைவேலி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள் வந்துபோகும்இச்சந்தை1918ம் ஆண்டில் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வீடியோ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கறைகாட்டவேண்டும்" என்ருர்,

தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பி. ஐ. சுப்பிரமணியம் பேசுகையில், கூறியதாவது: "மொரீஷியஸ், பிஜி, இலங்கை ஆகியனவற்றிலும், ஏனைய வெளிநாடுகளிலும் தமிழ்பேசத் தெரியாத தமிழர்கள் பலர் இருக்கிருர்கள்.

இவர்களின் நலனை முன்னிட்டும், தமிழ்மொழியின் பெறுமதியைப் பாதுகாக்கும்விதத்திலுமே எமது பல்கலைக் கழகம் 'வீடியோ' கஸெட்டுக்கள் மூலம் தமிழ் மொழிப் போதனையை அறிமுகஞ்செய்யவுள்ளது.

இந்த 'வீடியோ' தமிழ்ப் போதனைக்கான ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன. இன்னும் மூன்று மாதங்களில் இப்பணி பூரணமடைந்துவிடும்" என்ருர். (இ)

## அராலி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையடித்துச் சென்றது தொடர்பாக மகாலிங்கம் சின்னத்துரை, செல்லன் கனகு ஆகிய இரு சந்தேகநபர்கள் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நபர்கள் யாழ். பதில் நீதவான் திரு. எஸ், அமிர்தலிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட போது மேற்படி இளைப்பாறிய ஆசிரியரும், அவரது மருமகன் கந்தவேல், பிள்ளைகள் தவநிதி, திருநிதி ஆகியோரும் சந்தேகநபர்களை அடையாளம் காட்டினர்.

இதனையடுத்து இந்நபர்கள் யாழ். நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இருவரையும் இம்மாதம் 21ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட வேறுசிலரது தடயங்களும் காங்கேசன்துறைப் பொலிசாருக்கு கிடைத்துள்ளதால், அவர்களைத்தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவத்தில் 18நபர்கள் ஈடுபட்டதும் 85 ஆயிரம் ரூபாவிற்குமேற்பட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க)

காப்புறுதிக்கு
எய்ற்கன்
ஸ்பென்ஸ்

எமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களின் வசதிக்காக . . .
ஸ்ரீலங்காவில் காப்புறுதித் துறையில் 100 வருடங்களுக்கு மேல் அனுபவமுடைய காப்புறுதித் தாபனமாகிய எய்றகன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிடட் தமது கிளை அலுவலகத்தை 190 ஆஸ்பத்திரி வீதியில் (ஓட்டோஸ் பில்டிங்) நிறுவியிருக்கிருர்கள்.

ஆயுள், வாகனம், தீ, கொள்ளை, தனிப்பட்டவிபத்து, கடல் அபாயம், சுகாதாரம், நாணுவிதம் போன்ற சகல காப்புறுதி விடயங்களிலும் தனித்துவமான கவனத்துடன் உடனடிசேவையைப் பெற தயவு செய்து எமது கிளை அலுவலகத்திற்கு வருகை தரவும்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்
பாரம்பரிய சேவையுடைய ஒரே நிறுவனம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்
அன்ட் கம்பனீ லிமிட்டெட்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2
தொலைபேசி: 24604-6 23399

## "கலைஞர்களுக்கு ஊக்கமளிக்க ரசிகர்கள் முன்வரவேண்டும்"

(மாவிட்டபுரம்)

"கலைஞர்கள் கலையில் உயர்ந்த நிலை அடைவதற்கு ரசிகர்களின் ஆதரவே காரணமாகும். ரசிகர்களது கலா ரசனையை மதித்து கலைஞர்கள் மேன்மேலும் தமது கலையை வளர்த்துக்கொள்கிறார்கள். கலைஞர்களை போற்றி வளர்த்து ஊக்கமளிக்க ரசிகர்கள் முன்வர வேண்டும்."

இவ்வாறு கோண்டாவில் பிள்ளையார் கோவிலின் முன்றலில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த நாதசுர வித்துவான் ஆண்டான் கோவில் ஏ. வி. செல்வரத்தினத்துக்கு இசைக்கலைஞர்கள் ரசிகர்கள் சார்பாக அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் உரையாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை நடன விரிவுரையாளர் திரு. எஸ். வீரமணி ஐயர் கூறினார்.

நாதசுர வித்துவான் திரு. செல்வரத்தினத்திற்கு "நாதசுவாமிர்தவர்ஷணி" என்னும் பட்டத்தையும் சூட்டி பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்து தொடர்ந்து பேசுகையில் திரு. வீரமணி ஐயர் கூறியதாவது:-

"கலைஞர்களைக் கௌரவிப்பது, உற்சாகப் படுத்துவது யாழ்ப்பாண ரசிகர்களுக்குப் புதிதல்ல. தரமான கலைஞர்களை அவர்கள் என்றும் கௌரவித்து வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இப்போது முன்னணி வகிக்கும் பல வித்துவான்களை எமக்கு உருவாக்கித் தந்த தமிழக நாதசுர வித்துவானை நாம் பாராட்டிக் கௌரவிப்பது அவசியம். அவரது திறமை, அனுபவம் என்பவை தொடர்ந்தும் எமது கலைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்" என்றார்.

தமிழக நாதசுர வித்துவானுக்கு ஈழத்து பழம்பெரும் நாதசுர வித்துவான் திரு. வி. உருத்திராபதி தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தார்.

## நூல்கள் அன்பளிப்பு

[சித்தன்கேணி]

கலைநகர் நேருஜி கிராமமுன்னேற்றச் சங்க சன சமூக நூல் நிலையத்துக்கு சுமார் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்பம், சட்டம், வைத்தியம் ஆகிய துறைகளைச் சேர்ந்த நூல்களே அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கான ஆங்கில நூல்களும் இவற்றுள் அடங்கும்.

[க]

## அமரர் அன்னம்மா பிலிப்பையா



அன்புத் தாயாகப் பண்புத் தலைவியாக பாரிபுகழ வாழ்ந்த அன்னம்மா பிலிப்பையா அமரராகி மாதமொன்று மறைந்தது. அன்னாரின் பெருவாழ்வின் நினைவுகள் என்றும் அவரைப் புகழுடம்புடன் வாழ்வித்துக்கொண்டிருக்கிறது.

"பெறுமவற்றுள் யாமறிவ
தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என்ற வள்ளுவன் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய பெரும் பேறு மக்கட்செல்வம் என்கிறார். ஆம் கவிதையால்தான் கவிஞனின் உளக்கருத்தைக் காணலாம். ஓவியத்தால்தான் ஓவியன் வாழலாம். அது போன்றே பண்புடை மக்களாலேயே ஒரு மனிதன் வரலாறு நிலைபெற முடியும். அமரர் அன்னம்மா பிலிப்பையா நவரத்தினங்கள் போல் ஒன்பது மக்களைப் பெற்று குலப் பெருமை ஊர்புகழ வைத்த பேராளர். அதிலும் வைரம்போல் ஒளிவீசும் அருட்திரு யேசுநேசன் அடிகளின் அன்னை அவர் என நினைக்கையிலே அந்தத்தாய் எப்படிச் சிறப்புடன் இருந்திருப்பார் என்பது புலனாகிறது.

இறைவனின் திருச் சித்தத்தால் வாழ்வு மாறுபட்டுவிட்ட அமரர் அன்னம்மா பிலிப்பையா மறுமையில் இறை நிழலமர்வார்.

- பற்றிமாகரன்

## சஞ்சிகை வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின் "விருட்சம்" சஞ்சிகைவெளியீட்டுவிழா வரும் புதன்கிழமை மாலை இராமநாதன் மண்டபத்தில் திரு. இ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மங்கள விளக்கேற்றி வைத்து ஆசியுரை வழங்குவார். திரு. இ. கனகசபாபதி முதற் பிரதியைப் பெறுவார். புவியியல் துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

இச்சஞ்சிகை மறைந்த பேராசிரியர் கே. கைலாசதிக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

(வெ)

## அடிக்கல் நாட்டு விழா

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு நிலாவெளிக் கழகத்தின் நூல் நிலைய அடிக்கல் நாட்டுவிழா நாளை நடைபெறும். சாவகச்சேரி எம்.பி திரு வி. என். நவரத்தினம் அடிக்கல் நாட்டி வைப்பார். கழகத்தலைவர் திரு ப. பாலசுப்பிரமணியம் தலைமையில் இந்த அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.


எமது தற்போதைய,
முன்னைய வைப்புக்கணக்கு வாடிக்கை யாளருக்கு மட்டும்.
முதலீடு செய்யும் ஒருஅரிய சந்தர்ப்பம்!

# இப்பொழுது, மூன்றுவருட முடிவில் உங்கள் பணத்தை இரட்டிப்பாக்குங்கள்.



நீங்கள், 5000/- ரூ. தொகையையோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையையோ எம்மிடம் மூன்று வருடகால வைப்பில் இட்டால் அப் பணத்தை இரட்டிப்பாக்கித் தருகிறோம். (இது 33 1/3% வட்டி என்பதைக் குறிக்கும்)

முன்னணி முதலீட்டு நிறுவனம் எதுவும் முன்னெப்போதும் வழங்காத சலுகை, இவ்விசேட சலுகை எமது தற்போதைய வைப்புக்கணக்கு வாடிக்கையாளருக்கு மட்டுமே! (முன்னைய வைப்பு வாடிக்கையாளருக்கும் இச்சலுகை கிடைக்கும்)

விரையுங்கள்!

இவ்விசேஷ சலுகை 1983 ஜனவரி 31ம் திகதி வரையே செல்லுபடியாகும்.

**பணிப்பாளர்கள்**

திரு. R. மகாராஜா, முகாமைப் பணிப்பாளர்
திரு. R இராஜமகேந்திரன், முகாமைப் பணிப்பாளர்
திரு. V. N. குமாரசுவாமி F C A (Eng & Wales), ATII (Eng), M Inst A M (Eng), AMBIM (Eng), FCA (Cey).
திரு. B. மகிந்தா BSc (Hons)
திரு. V. சண்முகம் LLB (Lond) Hons, A I B (Lond), Attorney-at-Law.
திரு. D. J. குணவர்தன BSc, A C A, A C M A
திரு. W. பஸ்நாயக்க MBIM (Eng)
திரு. E. குணசேகர

**பிரதான வியாபார துறைகள்**

நிலையான வைப்புச் சேகரிப்பு, குத்தகை, கைத்தொழில் போன்ற துறைகளுக்கேற்ற இயந்திரங்கள், மூலப்பொருட்கள் இறக்குமதிக்கு நிதி வழங்கல், வர்த்தக வாகனங்களுக்கு நிதி வழங்கல், காப்புறுதி முகவர்.

**சுருக்கப் பேறுகள்**

| | 78/79 ரூ. | 79/80 ரூ. | 80/81 ரூ. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 250,000 | 250,000 | 750,000 |
| ஒதுக்கம் | 246,615 | 1,893,642 | 2,835,255 |
| வைப்புக்கள் | 11,325,480 | 42,139,162 | 66,938,481 |
| பொறுப்புக்கள் | 10,175 | 1,811,350 | 5,139,382 |
| வங்கி இருப்பு | 2,008,816 | 6,423,791 | 8,973,105 |
| வரியிறுக்குமுன் இலாபம் | 667,461 | 2,135,874 | 1,946,188 |
| வரியிறுத்தபின் இலாபம் | 453,777 | 1,635,873 | 1,629,687 |
| பங்கு இலாபம் | 250,000 | — | 187,500 |

## மகாராஜா முதலீட்டு நிறுவனம்

மகாராஜா நிறுவனத்தின் பின்பலங் கொண்டது
ஆரம்பம்: 23.9.76
தலைமை அலுவலகம்: 347, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
தொலைபேசிகள்: 29747/34133
பதிவு அலுவலகம்: 54, பாங்ஷால் வீதி. கொழும்பு 11. தொலைபேசி: 547308
கிளை அலுவலகம்: 122, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-24267

HTL MI 1219

## பொங்கல் விழாவும் போட்டிகளும்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை இளைஞர் கழகம் பொங்கல் விழாக் கொண்டாடியதுடன் விசேஷ நிகழ்ச்சிகளாக விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தியது. இளைஞர்கள்-சம்சாரிகள் கரபந்தாட்டப் போட்டி, சிறுவர்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகள் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. திரு. க. சத்தியானந்தசிவம் ஜே.பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். மற்றும் கழகப் போஷகர்கள் திரு. செ. செபஸ்தியாம்பிள்ளை, திரு. ஆ. க. அண்ணாமலை ஆகியோரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். தலைவர் திரு. டி ஏ. எம். குணசிங்கமும் செயலாளர் திரு. ந. ஜனகனும் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (அ)

## இடமாற்றம்

(சித்தன்கேணி)

யாழ்ப்பாணம் கச்சேரி அலுவலக காணிக்கிளையில் கடமையாற்றிய திரு ச. கார்த்திகேசு இம்மாதம் தொடக்கம் பிரதமஇலிகிதராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.



வேலணை வீரசிங்கத்தின் மகன் செல்வன் குறளரசுவின் மிருதங்க அரங்கேற்றம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது மிருதங்க ஆசிரியர் திரு. ஏ. எம். சந்திரசேகரம், செல்வன் குறளரசுக்கு மிருதங்கம் வழங்குவதை முதலாவது படத்திலும், மிருதங்கக் கச்சேரி நடைபெறுவதை 2-வது படத்திலும் காணலாம். படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

## யாழ்ப்பாண முதல்வருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதி பஸ்சாலை பண்ணை நிலையத்திற்கு மாற்றுவதென்ற முடிவைத் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கண்டித்து தமக்கு கடிதமொன்று அனுப்பிவைத்திருப்பதாக யாழ். முதல்வர் தெரிவித்தார் என்பது பிழையானது. நான் யாழ். மாநகர முதல்வருக்குக் கடிதம் அனுப்பவில்லை. வடபகுதிப் போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தின் பிரதியை மட்டுமே அவருக்கு அனுப்பினேன். இதன் பிரதிகள் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வெ யோகேஸ்வரன் பா. உ, ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன. இந்தப் பிரதிகளில் நான் எவ்வித கண்டனமும் தெரிவிக்கவில்லை.

யாழ். மாநகராட்சி மன்ற நிருவாகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஊர்காவற்றுறைத் தொகுதிப் பா. உ. க்கும் மக்களுக்கும் தொடர்புஇல்லையெனில், திரு. இராசா விசுவநாதன் இந்தப் பிரச்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தைத் தலையிடச்செய்ய முயன்றது ஏன்?

யாழ். மாநகர நிருவாகத்தினை நடாத்துவோர் வெளியிலுள்ள மக்களை நேரடிப்பாதிக்கும் விடயங்கள்பற்றி முடிவு செய்யும்பொழுது அம்மக்களின் வசதிகளையும் கருத்துக்களையும் அறிந்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. மூட்டை முடிச்சுகளுடன் படகில் ஏறி இறங்கி ஒரு பஸ்ஸில் மட்டுமன்றி இரண்டு பஸ்களிலும் ஏறி, யாழ். நகரை அடையும் மக்களை இரண்டு பஸ் தரிப்பிடங்களுக்கு அப்பால் நிறுத்தி இறக்கிவிட்டு, மூட்டை முடிச்சுகளைக் காவிக்கொண்டு நடந்துபோகுமாறு மனிதாபிமானமுள்ள எவரும் செய்வார்களா?

இதனை யாழ். மாநகரசபையினர் செய்ய முயன்றபொழுது நாங்கள் இதனைப் பெரும் பிரச்சனையாக்காமல் தடுத்தோம். ஆனால், யாழ். மாநகரசபை முதல்வர் தமது 'முதல்வெற்றி' தோல்விகண்டதுபோலும், உண்மை நிலையைக் கூறாமல், பிழையான தகவல்களைக்கூறிப் பிரச்னையைச் சிக்கலாக்கியுள்ளார்.

இன்றுவரை ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்கிருந்த வசதிகளை நினைத்தபடி மாற்றித் தொல்லைகொடுக்கும் பொழுது அம்மக்கள் அடிமைகள்போல் வாய் பேசாமல் அடங்கி ஒடுங்கி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதா யாழ். மாநகரசபை உறுப்பினரின் எதிர்பார்ப்பு? இவர்கள், திரு இராசா விசுவநாதனிடமுள்ள எனது கடிதப் பிரதியை ஒருமுறை படித்துப் பார்த்தால் தங்கள் வீராவேசமும் வெட்டிப் பேச்சும் குறித்து வெட்கப் படுவார்கள். (க)

## இன்றைய பலன்

தை மாதம் 4ந் திகதி
திங்கட்கிழமை
(17—1—83)

மேடம்: சுற்று வட்டத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை வேண்டும்.

இடபம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று மலரும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப் பணியில் கவனம்செலுத்தவும். சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

மிதுனம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் சேரும். இல்லம் பல் கலைக்கழகமாகமாறும், மகிழ்ச்சியான தினம்.

கடகம்: நீண்டநாள்உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசிதமான புத்தியுடன் நடக்கவும்.

சிங்கம்: சந்திப்பின் மூலம் பயன்உள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்து ஒன்றுகிடைக்கும்.

கன்னி: அரசபயத்துக்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதியில் கடமையாற்றுபவர் கவனம் வேண்டும்.

துலாம்: கைகொடுத்து உதவுவதற்கு நண்பர் முன்வருவார் காரியசித்தியு கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்றுமீண்டும் நண்பர்கள் ஆவார்கள்.

விருச்சிகம்; கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்யவிரும்புவீர்கள். ஓவியர் வாழ்வு ஒளிமயமாகும், சிலர் இடமாற்றமும் உண்டு.

தனு: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும். விருந்து உபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

மகரம்: எதிர்பாராதவிளைவுகளின் மூலம் செலவுகள் அதிகரிக்கும், சிலர் வாழ்வில் கடன்படவும் நேரிடும். பிணிக்கு இடம் கொடாது உடம்பைக் கவனிக்கவும்.

கும்பம்: அவசர முடிவினால் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக் கூடும். ஆத்திரம் வழக்கு விவகாரங்களில் ஈடுபடச் செய்யும். பூமிப்பிணக்கைத்தவிர்க்கவும்.

மீனம்: வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்வில் இணைவார்கள். கைத்தொழில் புரிவோருக்கு வருவாய் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தையும் பிறக்க வழியும் பிறக்கும்

வாடை அசைந்திட வந்தனள்! தையெனும்
மங்கையும் இங்கிதமாய்—புதுப்பா
வாடையுங் கட்டிய வண்ணச் சிறுமியர்
மங்களப் பொங்கல் என்றே—நின்றே
பாடி மகிழ்ந்திட வீரச் சிறுவரும்
பட்டாசு தாம் கொளுத்தச்—சத்தம்
கோடை யிடியென மாரியிற் கேட்டிடும்
கொண் டாட்டம் தைப் பொங்கல்!

புத்தம் புதியசுற் பானையுள் நீரினைப்
பூரிப் புடன் நிறைத்து—மகளிர்
சித்தம் மகிழ்ந்தடுப் பேற்றிப் பாலூற்றியே
செந்தழல் மூட்டி யெழு—தெய்வ
பத்தியுடன் நிறை பொங்கலைப் பார்த்துமே
பல்லாண்டு பாடி நின்றே—நல்ல
சுத்தமான பச்சை யரிசி பருப்புடன்
சுற்றி வணங்கி யிட்டு!

பொங்கலும் பொங்கினர்! போற்றிப்படைத்தனர்!
பூதங்கள் சுத்தி செய்தார்!—எங்கும்
மங்களம் பொங்கவே வாழ்த்தினர்! ஞாயிற்றின்
மாண்பினை ஏத்தி நின்றார்! வாழும்
தங்க மனப் பெண்டிர், சார்ந்தவர் யாவர்க்கும்
சாதம் படைத்து நின்றார்!!—நாட்டில்
எங்கும் வளஞ்செயும் ஏரேர் உழவரின்
ஏற்றத்தைப் போற்றி நின்றார்!

ஏரும் எருதும் இரவியும் மண்ணும்
இனிய மழையும் தெய்வம்—என்றே
ஆரும் வியப்ப அறிந்து மொழிந்தவன்
ஆற்றல் மிகு தமிழன்!—நன்றே
பாரும் இலங்கிடப் பாடுபட்டே நிற்கும்
'பாட்டாளி யுழவன்' கண்ட—அமுதச்
சாரம் மிகும்மொழி, ''தையும் பிறக்க
வழியும் பிறக்கும்'' அன்றோ!

- வித்துவான் சி. ஆறுமுகம்


றீகல் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி (இருவேடம்) - ரத்னா
எங்க வீட்டுப் பிள்ளை

வெலிஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு 2-30
சந்திரசேகர் - சுஹாஜினி
பாலைவனச்சோலை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஸ்ரீதேவி
முடிசூடாமன்னன்
(கலர்)
அடுத்து
கிழக்கே போகும் ரயில்

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
வெகுவிரைவில்:
சிவாஜி-சாவித்திரி
கர்ணன்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

மனோகரா (யாழ்நகர்) இன்று மட்டும்
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30.
MELGIBSON in
MAD MAX 2
(Action packed thriller—Adults Only)
18-1-83 முதல் தனிமரம்

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
ராமன் எத்தனை ராமனடி

சாந்தி யாழ்நகர்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன்
நம்பியார், நாகேஷ்
ராமன் தேடிய சீதை
[புத்தம் புதிய வண்ணப்பிரதி]

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
3-வது HOUSE FULL வாரம்
அலைமோதும் பெண்கள்கூட்டம்
ஆனந் [சிவாஜி கணேசன்]
தன்னுடைய காதலிக்காக (வாணிஸ்ரீ)
கட்டிய மாளிகை
உங்கள் குடும்பத்துடன் விஜயம்செய்யுங்கள்
சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

# காங்கேசன் 3ம் கட்டத் தொழிலாளருக்கு சம்பளம் கிடைப்பதில் தாமதம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைசிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்ட பிரிவில் பணி புரியும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தொழிலாளர்களுக்கான வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வரிப்பணம் செலுத்துவது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்னையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்டப் பிரிவிலும் ஏனைய பகுதிகளிலும் சுமார் 2000 கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்கள் கடமை புரிகிறார்கள். 6 கிராம அபிவிருத்திச் சங்கங்கள். இத்தொழிலாளர்களை வேலைக்கு வழங்கியுள்ளன.

இதன்மூலம் இச்சங்கங்கள் பெறும் வருமானத்திற்கு வரி செலுத்தவேண்டுமென வருமானவரிப் பகுதியினர் கோரியிருந்ததாகவும், கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இது செலுத்தப்பட்டு வந்ததாகவும், தற்போது இச்சங்கங்கள் தொழிலாளர்களை வேலைக்கு வழங்கியகாலத்திலிருந்து இந்த வரி செலுத்தப்படவேண்டுமெனக் கோரியுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட சங்கங்கள் கணக்கு வைத்துள்ள வங்கிகளுக்கு வருமானவரிப் பகுதியினரால் இது அறிவிக்கப்பட்டுக் கொடுப்பனவுகள் செய்ய வேண்டாமெனக் கோரப் பட்டுள்ளதாகவும், இதனால் சங்கங்கள் வங்கிகளில் பணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப் படுகிறது.

## இன்று பண்ணிசை அரங்கேற்றம்

(சுண்டிக்குளி)

லண்டன் சைவ சித்தாந்த நிலையத் தலைவர் சைவத்தமிழ் மணி கி. ஞானசூரியனின் தேவார இன்னிசைக்கச்சேரி அரங்கேற்றம் நல்லையாதீன மண்டபத்தில் இன்று திங்கட் கிழமைமாலைநடைபெறுகிறது யாழ் இந்துக்கல்லூரிஆசிரியர் சங்கீத பூஷணம் கா. மாணிக்கவாசகர் உடன் திருமுறை ஓதுவார்.

இவ்வரங்கேற்ற நிகழ்ச்சிக்குத் தொழிலதிபர் சிவநெறிப் புரவலர் க. கனகராசா தலைமை தாங்குவார். நல்லையாதீனகுரு மகா சந்நிதானம் தவத்திரு.சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அருள் ஆசியுரை வழங்குவார்.

## இ, போ, ச. ஊழியருக்கு அதிர்ஷ்டம்

(கரவெட்டி)

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு கடன் அடிப்படையில் 'டெலிவிஷன்' பெற்றுக் கொள்ளக் கூடிய அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

இ. போ. ச. ஊழியர்களின் சேமலாப நிதியில் 40 வீதப் பணத்தில் குறிப்பாக 15 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்ட பணத்தின் மூலமே 'டெலிவிஷன்' வாங்குவதற்கான ஏற்பாடுகளைப் போக்குவரத்துச் சபை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இப்படியும் நடக்கிறது

தீவைத்தல், வெள்ளையர்களுக்கு ஒரு கைவந்த 'கலை'யா?

ஆசிய நாடுகளில் மலிந்துவிட்ட இச்சம்பவங்கள் ஒரு வருடத்துக்கு முன்னர் பிரிட்டனையும் கலக்கியதுண்டு.

யாழ்ப்பாணத்துக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்கப் பிரமுகர் திரு. ரெட்டி கூறினார்:

"தீவைப்பு ஒன்றும் இப்போ பெரிய சமாச்சாரம் அல்ல. நம்ம நகரில் கலவரங்கள் எதுவும் தலை தூக்கினால் கறுப்பு இனத்தவர்களின் கடைகள், இல்லங்களை வெள்ளைக் காரர்கள் தீவைத்து முற்றாக எரித்துவிடுவார்கள். இது அங்கு சின்ன விஷயமாகிவிட்டது........"

'ஊடுருவி'

## பத்தொன்பதாவது மாடியிலிருந்து விழுந்து இலங்கையர் மரணம்!

### சிங்கப்பூரில் சம்பவம்

(சுழிபுரம் நிருபர் க. வாமதேவன்)

சிங்கப்பூரில் தனியார் நிறுவனத்தின் சுட்டடப் பகுதியொன்றில் கடமையாற்றிய திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவர் பத்தொன்பதாவது மாடிக்கட்டிடத்திலிருந்து தவறி விழுந்து ஸ்தலத்தில் பலியானார்.

பலகைகளை ஒன்றாகக்கட்டி 'கிறேனில்' ஏற்றிவிட்டு அதனை இரக்கிய போது கைபிடிக்க ஒன்றும் இல்லாததால் கீழே விழுந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.

இருநூற்றுக்கும் அதிகமான இலங்கையர் வேலை செய்யும் இந்த நிறுவனத்தினர் மரணமான பாலசுப்பிரமணியத்தின் பிரேதத்தை தமது செலவில் அனுப்பி வைத்துள்ளதுடன் இறந்தவரின் குடும்பத்திற்கு போதுமான நஷ்டஈடு வழங்கவும் ஏற்பாடுகளை செய்துள்ளனர். இவருக்கு ஐந்து குழந்தைகள் உண்டு.

## குழந்தைகளுக்கு ஆசைகாட்டி ஏமாற்றிய ஆசாமி!! பொலிஸ் விருந்தாளியானார்

(யாழ்ப்பாணம்)

மூன்று குழந்தைகளை ஆசை காட்டி, கடத்திச் சென்று குழந்தைகளின் காதணிகளைத் திருட முயன்ற ஒரு நபரைப் பொது மக்கள் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப் படைத்தனர்.

குழந்தைகள் சத்தமிட்டு குளறியதைத் தொடர்ந்தே பொதுமக்கள் துரத்திப் பிடித் தனர்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் முனியப்பர் ஆலயத்திற்குச் சமீபத்தில் நிகழ்ந்தது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இரு சிறுமிகளும் ஒரு சிறுவனும் முனியப்பர் ஆலயத்தில் நின்ற போது இனந்தெரியாத ஒரு நபர் அவர்களை ஆசை காட்டி ஏமாற்றி கோவில் பின்பகுதியிலுள்ள இடத்திற்குக் கூட்டிச் சென்று அப்பாவி குழந்தைகளின் காதணிகளை கழற்றினாராம். இதைக் கண்ட குழந்தைகள் 'ஓ' வென்று அலறிக் கத்தவே குழந்தைகளின் அவலக்குரல் கேட்டு ஆலயத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் ஓடிப்போய் திருடனைத் துரத்திப் பிடித்தனர் என்றும் காதணியையும் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுப்பேர்வழியை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

[மட்டுவில் நிரு.]

## சட்மா அதிபரை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜராகி இருந்தார். அவர் சார்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயா ஆஜராகி யிருந் தார்.

நீதவான் சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் 2ம் எதிரியான பொன்சியஸ் பெர்னாண்டோவை விடுதலைசெய்தார்.

1ம் எதிரியான ராஜ்நுமாருக்கு (ராஜன்) எதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் இக் கொலைக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிக்கா அருட்பா கழகம், சிவசுப்பிரமணியர் ஆலயம், நேதால் தமிழ்ச்சபை ஆகியவற்றின் தர்மகர்த்தாவும், சில தமிழ்ச் சங்கங்கள், கழகங்கள் ஆகியவற்றின் தலைவரும் ஆவார்.

திரு. ரெட்டி நேற்றுக் காலை 'ஈழநாடு'விடம் மேலும் கருத்து வெளியிடுகையில்; டர்பனிலுள்ள சைவக்கோவில்களில் தினசரி பூசை நடக்கிறது. குருபூசை தினங்களும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனாலும் சிறப்பான பூசகர் இல்லாதது பெரும் குறையாக உள்ளது" என்று கவலை தெரிவித்து, ஆகமம் தெரிந்த ஒரு பூசாரை இலங்கையிலிருந்து எதிர்பார்க்கின்றோம். என்று அழைப்பு விடுத்தார்,

'அங்கு சமயம் கற்பிக்க சைவப் புலவர் இருக்கின்றார், சங்கீதம் போதிக்க சங்கீத வித்துவான்களும், பூஷணங்களும் உள்ளனர், இருந்தாலும், கோடிபுண்ணியத்தை வாரிவழங்கும் ஆலய தரிசனத்தில் ஒரு நல்ல பூசகர் வேண்டாமா?' என்று திரு. ரெட்டி கேள்வி தொடுத்தார்.

'பொங்கல், புதுவருடம் தீபாவளி எல்லாம் உண்டா' என்று கேட்டபோது; உரத்த குரலில் 'ஓ...எல்லாம் ஒழுங்காக நடக்கிறது. நவராத்திரி பூசைகூட சிறப்பாக இருக்கும். சிவராத்திரிகூட மார்ச் பதினைன்றில்வருகிறது.இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க நான் விரைவாகச் செல்ல வேண்டியிருக்கிறது' என்றார்.

'அங்கு தமிழர் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மொழி தான் பேச்சு வழக்கற்று செத்துக் கொண்டிருக்கிறது. நான் டர்பனிலே பிறந்தேன் என்பதாலும் எனது பெற்றோர் கோவில்கட்டி, தமிழையும் ஊட்டிய காரணத்தாலும் தமிழை வளர்க்கும் பணியில் சில தமிழ்ப் பிரமுகர்களுடன் சேர்ந்து ஈடுபட்டிருக்கின்றேன், அங்கு தமிழ் பாடசாலைகளை அமைக்கவும், தமிழ் மொழித் தொடர்புகளை அதிகரிக்கவும் இப்பொழுது முயற்சிகள் பரவலாக நடக்கின்றன' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த திரு, ரெட்டி, தொழிலதிபர் க. கனகராசா இல்லத்தில் தங்கியிருந்தார். இன்று கொழும்பு திரும்புகிறார்.

## புதிய கொலை....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்தே, இரகசியப் பொலிஸார் மேற்படிகருத்தை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் பரவலாக விநியோகம் செய்யப்பட்ட 'தமிழீழ விடுதலைப்புலிகள்' துண்டுப்பிரசுரத்தில் யாழ். குடாநாட்டில் தனியார் சொத்துக்களை கொள்ளையடிக்கும் கும்பலுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததும் அவர்கள் மரண தண்டனைக்குள்ளாகும் பாணியில் கருத்து வெளியிட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது என்று தெரிவித்த பொலிஸ் உயர்அதிகாரி நாயன்மாரகட்டு கொலைச் சம்பவத்துடன் மேற்படி எச்சரிக்கையை தொடர்பு படுத்துவதாக உள்ளது என்றும், சமூக விரோதிகள் குறித்து ஆயுதப்படையினரும் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர் என்றும் கருத்து வெளியிட்டார்,

துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட நாயன்மாரகட்டைச் சேர்ந்த மார்க்கண்டு பாபுகுமார் என்பவரின் சடலம் பிரேதபரிசோதனை செய்யப்பட்ட போது 5 துப்பாக்கிக் குண்டுகள் எடுக்கப்பட்டன.

தலையிலிருந்து மூன்றுகுண்டுகளும் நெஞ்சுலிருந்து இரு குண்டுகளும் எடுக்கப்பட்டன.

## 3-ம் கட்டம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

3-ம் கட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில்மத்தியூ பூர்த்தியடைந்துள்ள 3-ம் கட்ட வேலைகளை சில தினங்களில் பார்வையிடவிருக்கிறார்.

சகல வேலைகளும் பூர்த்தியடைந்ததும் ஜனாதிபதி திரு. ஜெ. ஆர். ஜெயவர்த்தனதிறந்துவைப்பார் எனத் தெரிய வருகிறது,

## காரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மல்லாகத்தில் காங்கேசன் துறை பிரதான வீதியிலுள்ள ஒரு கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது. சுமார் எட்டரை மணியளவில் இளைஞர் ஒருவர் வந்து தனது உறவினர் யாழ். ஆஸ்பத்திரியில் இருப்பதால் காரை வாடகைக்கு விடும்படி கேட்டார். நான் அவரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டேன். யாழ். ஆஸ்பத்திரியை வந்தடைந்ததும் காரை நிற்பாட்டினேன். அவர் பின்னர் சாவகச்சேரிக்கு வரும்படி சொன்னார். எனக்குச் சந்தேகம் ஏற்படவே சாதுரியமாக காரைத் திருப்பிக் கொண்டு பொலிஸ் நிலையம் வந்து அவரை ஒப்படைத்தேன். எனக்கு 50 ரூபா பெற்றோல் செலவு ஏற்பட்டுள்ளது.

இக்காரை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு சென்ற கைரமுத்து நகுலேஸ்வரன் [26 வயது] என்பவரை பொலிசார் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

இவர் கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்தவர். சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ். இராசலிங்கம் விசாரணை மேற்கொண்டுள்ளார். [மா]

## துக்கம்...

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள காரியாலயத்தில் நடைபெற்றபோது மேற் குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ. இ. த. காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் இச்செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது.

'தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிலும தமிழ்பேசும் மக்கள் நலனைப் பேணுவதற்கு அவசியமான ஏனைய உள்ளூராட்சி தேர்தல்களிலும் போட்டியிடுவது' என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதுடன், தேர்தல் நடவடிக்கைகளை உரிய முறையில் வழிப்படுத்துவதற்கு தலைவர் திரு, எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.(மா)


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னுதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

82, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, [illegible]-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது: Registered as a News Paper at the General Post Office Sri Lanka under numbers Q. D. 100236/81 Eelanaadu - P. O. Box 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.